**சுருக்கம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதல் – கூடுதலாக இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்கள் புதிதாக தோற்றுவித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (சா.மெ.1)த்துறை**

அரசாணை (நிலை) எண். 40

நாள்:13.7.2018
விளம்பி வருடம்,
ஆனி மாதம் 29–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

1. மாண்பமை உச்ச நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண்.5854/94–இல் தீர்ப்பு வழங்கிய நாள் 2.09.1994.
2. அரசாணை (2ப) எண். 108, ஆதி(ம) ப ந துறை, நாள் 12.09.2007.
3. அரசாணை (நிலை) எண். 106, ஆதி(ம) ப ந துறை, நாள் 15.10.2012.
4. அரசாணை (நிலை) எண். 38, ஆதி(ம) ப ந துறை, நாள் 12.05.2017.
5. அரசாணை (நிலை) எண். 50, ஆதி(ம) ப ந துறை, நாள் 28.07.2017.
6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண்.36982/2016–இல் வழங்கிய தீர்ப்பு நாள் 28.03.2017.

-------

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்பமை உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீடு ஆணையின் அடிப்படையில், ஆதிதிராவிடர் இனச் (Scheduled Castes) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்க மாவட்ட அளவிலான மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களையும் (District Level Vigilance Committees), பழங்குடி இனச் (Scheduled Tribes) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்க மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவினையும் (State Level Scrutiny Committee) அமைத்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. இதனைத் தொடர்ந்து, மேலே மூன்று மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தனியர்கள் பெற்ற ஆதிதிராவிடர் (Scheduled Castes) மற்றும் பழங்குடியினச் (Scheduled Tribes) சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மை தொடர்பான கள விசாரணை அறிக்கைகளை கண்காணிப்பு விசாரணை குழுக்கள் மேற்கொண்டு மாவட்ட விழிப்புணர்வுக் குழு/பழங்குடியினர் நல இயக்குநருக்கு அளிக்கும் பொருட்டு சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி

த.பி.பா...

மற்றும் மதுரை ஆகிய தலைமை இடங்களில் நான்கு மண்டல Scheduled Castes மற்றும் Scheduled Tribes கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகள் (Scheduled Castes/Scheduled Tribes Vigilance Cells) தோற்றுவித்து ஆணையிடப்பட்டன.

3. பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் தொடர்பாக கல்வி நிலையங்களில் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் சேர்ந்த மாணாக்கர், மாநில மற்றும் மத்திய அரசு அலுவலகங்கள், மாநில மற்றும் மத்திய அரசு சார் நிறுவனங்கள் ஆகியவற்றில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணியில் சேர்ந்தவர்களது சாதிச்சான்றுகள், சாதிச்சான்றிதழ் வழங்கக் கேட்டு நீதிமன்றத்தை நாடிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மனுதாரர் வழங்கக் கோரிய பழங்குடி இனச்சான்று அந்நபர் பெறத்தகுதி உடையவரா என்பதை கண்டறிவதற்காக ஏற்கனவே மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட கோப்புகள் மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவிடம் நிலுவையிருந்தன. மாண்பமை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க இவ்வாறான அனைத்து பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான இனங்களும் கள ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். ஏற்கெனவே உள்ள 4 மண்டல கண்காணிப்பு பிரிவுகளைக் கொண்டு, நிலுவை இனங்களை கள ஆய்வு செய்து, சாட்சிகளை விசாரித்து, ஆவணங்களை பெற்று, அறிக்கை தயார் செய்து மாநில கூர்நோக்கு குழுவின் இறுதி ஆணைக்கு அனுப்ப நீண்ட காலமாகும் என்பதாலும், கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர், அரசுப் பணியில் சேர்வதற்காக காத்திருப்பவர்கள், அரசுப் பணியில் உள்ளவர்கள் மற்றும் பணி நிறைவு பெறவுள்ள அரசுப் பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதாலும், சென்னை உயர் நீதிமன்றம் சில நேர்வுகளில் வழங்கிய தீர்ப்புகளின்படி, மாநில கூர்நோக்குக் குழுவில் பெறப்பட்டு நிலுவையிலுள்ள பழங்குடியினர் சாதி சான்றிதழ்களை விரைந்து முடிவு செய்யும் பொருட்டு ஏற்கனவே இருந்த 4 மண்டல கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கும் 38 (31 பிரிவுகள் மாவட்டங்களிலும் 7 பிரிவுகள் மாநகரங்களிலும்) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் தங்கள் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினச் சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல் தொடர்பாக கள ஆய்வு செய்யும் பணியினையும் மேற்கொள்ள மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

4. தற்போதுள்ள மாநில கூர்நோக்குக் குழு, கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகளிடமிருந்து பெறும் அறிக்கைகளை அக்குழு உறுப்பினர்களின் அலுவல் சார்ந்த பணிகளுடன் நிலுவையிலுள்ள ஆயிரக்கணக்கான பழங்குடியினச் சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மை குறித்து விசாரணை செய்து முடிவு எடுப்பது என்பது இயலாத ஒன்றாகும் என கருதியதாலும், பார்வை 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிப்பேராணை மனு எண்.36982/2016–இல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 28.3.2017 அன்று வழங்கிய தீர்ப்பில் கூடுதலாக இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களை அமைத்து, நிலுவையில் உள்ள இனங்களை விரைந்து முடிக்க ஆணையிட்டுள்ளதன் அடிப்படையிலும், நிலுவையிலுள்ள பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான கோப்புகளை கூர்ந்தாய்வு செய்து, இறுதி ஆணை வெளியிடும் பொருட்டு கூடுதலாக மூன்று உறுப்பினர்கள் கொண்ட இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்கள் முழுநேரம் இயங்கும் வகையில் தோற்றுவிக்கலாம் எனக் கருதி, அவ்வாறே

...3

கீழ்க்கண்டவாறு கூடுதலாக இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களை அமைத்தும், அக்குழுக்கள் மற்றும் குழுக்களுக்கு உதவிபுரிய கீழ்க்குறிப்பிடப்படும் பணியிடங்களை அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது:-

I. மாநில அளவில் இரண்டு கூடுதல் கூர்நோக்குக் குழுக்கள்:

| வரிசை எண் | பணியிடம் | பொறுப்புகள் | எண்ணிக்கை | பணியமர்த்தும் முறை |
|---|---|---|---|---|
| 1. | கூடுதல்செயலாளர் அல்லது இணைச்செயலாளர் | தலைவர் | 2 | பொதுத் துறையின் (Special A) மூலமாக சிறப்பினமாக ஒதுக்கீடு |
| 2. | பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் தரத்திற்கு சமமாக இந்திய வனப்பணி அலுவலர் | உறுப்பினர் செயலர் | 2 | இந்திய வனப்பணி அலுவலர், வனத்துறை (மாற்றுப்பணி) |
| 3. | மானிடவியல் வல்லுநர் | உறுப்பினர் | 2 | அமர்வு நாள் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் அனுமதிக்கலாம் |
| மொத்தம் | | | 6 | |

II. கூடுதல் ஒரு பிரிவு (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை)

| வரிசை எண் | பணியிடம் | எண்ணிக்கை | பணியமர்த்தும் முறை |
|---|---|---|---|
| 1. | பிரிவு அலுவலர் | 1 | பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் மூலமாக சிறப்பினமாக ஒதுக்கீடு |
| 2. | உதவிப் பிரிவு அலுவலர் | 2 | |
| 3. | தட்டச்சர் | 1 | |
| 4. | நேர்முக எழுத்தர் | 2 | |
| மொத்தம் | | 6 | |

5. மேலே, புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு மாநில கூர்நோக்கு குழுக்களும் முழுநேரம் இயங்கும். இக்குழுவில் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுபவர் மற்றும் கூடுதலாக தோற்றுவிக்கப்பட்ட பிரிவில் பணிபுரிபவர்கள் (அலுவலர் மற்றும் பணியாளர்கள்) நியமனம் செய்யப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு நியமனம்

...4

செய்யப்படுவர். ஓராண்டிற்குப் பின்னர் இக்குழுக்கள் மற்றும் பிரிவின் தேவை குறித்து தனியே ஆய்வு மேற்கொள்ளப்படும்.

6. மேலே பத்தி 4(I)–இல் அனுமதிக்கப்பட்டுள்ள குழுக்களின் இரு தலைவர் பணியிடத்திற்கான அலுவலரை கூடுதல் செயலர்/இணைச் செயலர் நிலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு உடனடியாக ஒதுக்கீடு செய்யுமாறு பொதுத்(சிறப்பு–அ)துறையின் முதன்மைச்செயலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இக்குழுக்களின் இரு உறுப்பினர் செயலர் பணியிடத்திற்கான இந்திய வனப்பணி அலுவலர் நிலையிலான இரு அலுவலர்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு மாற்றுப்பணியில் ஒதுக்கீடு செய்யுமாறு சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இரண்டு மானிடவியல் வல்லுநர்கள் பல்கலைகழகங்களிடமிருந்து பெறப்படும் விண்ணபங்களிலிருந்து கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களால் நேர்முகத் தேர்வு நடத்தி தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் மானிடவியல் வல்லுநருக்கு அமர்வு ஒன்றுக்கு ரூ.1000/– ஊதியமாக வழங்கப்படும்.

7. மேலே பத்தி 4(II)–இல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களுள் பிரிவு அலுவலர், உதவிப் பிரிவு அலுவலர், தட்டச்சர் மற்றும் நேர்முக எழுத்தர் ஆகிய பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் இருந்து பணிநாடுநர்களை எதிர்நோக்காமல் தலைமைச்செயலக இதர துறைகளில் பணிபுரியும் பணியாளர்களிலிருந்து சிறப்பினமாக ஒதுக்கீடு செய்யுமாறு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை செயலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கான (மானிடவியல் வல்லுநர் பணியிடம் தவிர)செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> 2251-00 தலைமை செயலகம் – சமூகப்பணிகள் 090 தலைமை செயலகம் – மாநிலச் செலவினங்கள் AP – ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை 01 – சம்பளங்கள்.
> [DPC 2251 00 090 AP 0102]

மானிடவியல் வல்லுநர் பணியிடத்திற்கான செலவினம் ரூ.1,00,000/–கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

> 2251-00 தலைமை செயலகம் – சமூகப்பணிகள் 090 தலைமை செயலகம் – மாநிலச் செலவினங்கள் AP – ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை 33 – தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் 02 ஊதியம்.
> [DPC 2251 00 090 AP 3323]

9. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான ஊதிய செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2018–2019 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு

செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கான ஊதியத்தை பெற்று வழங்கிட பிரிவு அலுவலர்(பட்டியல்), ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களுக்கான செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிரிவு அலுவலர்(பட்டியல்) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 4–இல் வரிசை எண்.I–இல் கூடுதலாக தோற்றுவிக்கப்பட்டுள்ள இரண்டு மாநில கூர்நோக்குக் குழுக்கள் அரசு ஆணை(2ப) எண்.108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.12.9.2007–இன் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க பணிகளை மேற்கொள்ளும்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 246/ADS(Pk)/ஆதி(ம)பந/2018, நாள்.13.7.2018 மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.710(எழுநூற்று பத்து) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர்,
வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,சென்னை–5.
முதன்மைச் செயலர், பொதுத்(சிறப்பு–அ)துறை, சென்னை–9.
முதன்மைச் செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
செயலர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை–5.
இயக்குநர், காவல்துறை, சென்னை–4.
கூடுதல் காவல்துறை இயக்குநர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு, சென்னை–4.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்,
இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், உதகை–4.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18/35.

<u>நகல்:–</u>
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச்செயலர்(ஆதி(ம)பந), சென்னை–9.

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
பொது(சிறப்பு.அ)துறை, சென்னை–9.
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொ.II) துறை சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (அநமு1, அநமு2, சாமெ.2,
சாமெ.3,சா.மெ–4)துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பட்டியல்)துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/ உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/07/2018
பிரிவு அலுவலர்.

13/7/2018